மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ரூ.750.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரமுறையில் மாநகராட்சிதான் அதிகப் பொறுப்பெடுத்து உரிமம் வழங்குகிறது. ஆனால் அங்கிருக்கிற கழிவுப்பொருட்களுக்கு அதற்குரிய சரியான கட்டணத்தைக் கட்டாமல் அங்குள்ள கழிவுப்பொருள்களை நடைபாதையில் அந்தந்த ஸ்டுடியோ வாசல்களில் போட்டுவிடுகிறார்கள், அதற்காக கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. மாநகராட்சி நன்மையைக் கருதி அதை வசூலிக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அப்படி எதுவும் புகார் வரவில்லை. புகார் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : அரசு உதவி பெற்று ஏதாவது ஸ்டுடியோக்கள் சென்னையில் நடக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதற்கும் நான் சொல்கிற பதிலுக்கும் தொடர்பு இல்லை.

திரு. துரை முத்துசாமி : அரசு ஸ்டுடியோ கட்ட ஏதாவது உத்தேசமுண்டா? மற்ற மாவட்டங்களில் அப்படி ஏதாவது ஸ்டுடியோக்கள் கட்டுகிறவர்களுக்கு உதவும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது செய்தி விளம்பரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி.

கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வசதி

* வினா எண் 48— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78-ம் ஆண்டுக்கு கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு தமிழக அரசு ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனிடமிருந்து ரூ. 4 கோடி கடனுதவி பெற்றுத்தந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் ஆயுள் காப்பீட்டு கழகத்திடமிருந்து தமிழ்நாடு அரசு உத்தரவாதத்தின் பேரில் 16-11-77-ல் கடனாக ரூ.4.00 கோடியும், 10-3-78-ல் கடனாக ரூ.2.00 கோடியும், மேலும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ள வீடுகளைப் புதுப்பிக்க, வழங்குவதற்கென தனிக் கடனாக 27-3-78-ல் ரூ.1.00 கோடி தொகையும் பெற்றுள்ளது.

1979 பிப்ரவரி 14]

திரு. என். கிட்டப்பா : கூட்டுறவு மூலம் வீடுகள் கட்டும் திட்டத்தை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்வதில் தற்போது ஏற்பட்டு வரும் தாமதத்தைத் தவிர்க்கவும் அதன் விதிமுறைகளை ஓரளவு தளர்த்தவும் அரசு ஆவன செய்யுமா ?

[முற்பகல் 9·50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலுள்ள கஷ்டங்களை எந்த விதமாக மாற்றலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு எழுதி அனுப்பினால் அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் கூறும்போது வருடம் ஒன்றுக்கு 4 கோடி, 2 கோடி என்றெல்லாம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், நடைமுறையில் பல சங்கங்களிலிருந்தும் கடன்கள் பெறுவதற்கான மனுக்கள் வந்தும் கடன்கள் பட்டுவாடா செய்யாமல் அந்தச் சங்கங்கள் எல்லாம் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அதோடு வீடுகள் கட்டும் சங்கம் டிவிஷன் ஒன்றுச்கு ஒன்று என்று இருப்பதற்குப் பதிலாக தாலூகா ஒவ்வொன்றுக்கும் ஒன்று என்று இருந்தால் தான் சரியாகக் காரியங்கள் நடை பெறும். ஆகவே இதைச் சீர்திருத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருடம் என்று சொல்லும்போது, காலன்டர் இயர், அபிஷியல் இயர், அக்கௌன்ட் இயர், கோப்ரட்டீவ் இயர், என்றெல்லாம் இருக்கிறது. இதில் கோப்ரட்டீவ் இயர் என்று சொல்லுவது, ஜுலை 1-ம் தேதி முதல் சூன் 30-ம் தேதி வரை. ஓராண்டில் கூடுமான வரையில் கிடைக்கின்ற அளவு கடனை கொடுத்து வருகிறோம். தாமதப்பட்டு விட்டால், கேரீ ஓவர் செய்து அடுத்த ஆண்டு கொடுக்கப்படும். அந்த முறையில் 30-6-79-க்குள் வாங்கப்பட்ட எல்லா மனுக்களுக்கும் கடன் கொடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்படும். இந்த பத்து வட்டார வீட்டு வசதி சங்கங்கள் நீங்கலாக 50 கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களும் தொடங்கப்படுகின்றன. ஆகவே ஐம்பதும், பத்தும், அறுபது கிராம வீட்டுவசதி சங்கங்கள் தமிழ்நாட்டில் செயல்படும், தமிழ்நாட்டிலுள்ள எல்லா கிராமங்களும் பயன்பெற வேண்டும் என்பது தான் நோக்கம். அப்படியே ஒருசில கிராமங்களுக்கு இந்த உதவி கிடைக்கவில்லை என்றால் பக்கத்திலுள்ள கிராமத்திலுள்ள சங்கத்தோடு தங்கள் கிராமத்தையும் இணைத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இதில் சிரமங்கள் ஏதாவது இருக்குமென்றால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் நிச்சயம் அரசு அதை பரிசீலிக்கும்,

திரு. கு. வடிவேலு ; பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் வாங்கப் படுகின்ற கடன்களை எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கட்ட வேண்டும்? இதற்கு எவ்வளவு வட்டி வசூலிக்கிறார்கள்? கடனைப் பெறுவதற்கு சென்றால், கிராமங்களில் என்ன கேட்கிறார்கள் என்றால், டாக்மென்டுகள் கேட்கிறார்கள். பத்திரம் வேண்டும் என்கிறார்கள், பட்டா வேண்டும் என்கிறார்கள், ஸ்கெட்ச் வேண்டும் என்கிறார்கள், இதற்கெல்லாமே 300 ரூபாயிலிருந்து 500 ரூபாய்வரை செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன, இவற்றை போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொல்லிய கஷ்டங்களை எல்லாம் தொகுத்து என்னிடத்தில் மனு கொடுத்தால் அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : தலைவர் அவர்களே, தற்போது, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் கொடுப்பதில் 600 ரூபாய் மானியமாக வழங்குகிறது. இதை 1,500 ரூபாயாக ஆக்க உத்தேசம் உண்டா? முதலில் இந்தக் கடன் சென்னையில் சாங்ஷன் செய்யப்படுகிறது. இரண்டாவது கடன் பெற வேண்டு மானாலும் சென்னைக்கு வரவேண்டிய தொல்லைகள் இருக் கின்றன. இந்த முறையை மாற்றி முதல் முறை மட்டும் சென்னை வந்து கடனை சாங்ஷன் செய்து வாங்கிவிட்டு, பின்னால் உள்ள கடன் தொகையை ஆங்காங்கே சாங்ஷன் செய்து வாங்கிக் கொள்வதற்கு தகுந்தபடி உத்தரவு இடப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற தகவல் சரியாக இருக்கும் என்று தெரியவில்லை. கிராம வீட்டு கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக ஐயாயிரம் ரூபாய் வழங்கப் படுகிறது. அரிசன மக்களுக்கு வட்டியில்லாமல் கொடுக்கப்படுகிறது. அவர்களுக் குரிய வட்டியை இந்த அரசே ஏற்றுக் கொள்கிறது மற்றவர் களுக்கு குறைந்த வட்டியில் கொடுக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் 600 ரூபாய் மானியம் வழங்கப் படவில்லை, அப்படிப்பட்ட தகவலும் சரியில்லை என்று கருதுகிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் வீடுகள் கட்டும் திட்டத்தில் கடன் பெற வேண்டுமானால் கண்டிப்பாக சொத்து உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கிறது, ஆனால், அதே சமயத்தில் சொத்து இல்லாதவர்கள் இதற்காக விண்ணப்பித்து, பல நாட்கள் அலையோ அலை என்று அலைந்து இறுதியாக,

1979 பிப்ரவரி 14]

சொத்து இல்லை என்ற காரணத்தால் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். அதோடு கொஞ்ச நஞ்சம் சொத்து உள்ளவர்களுக்கு இந்தக் கடன் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருந்தாலும் கூட திரு. வடிவேலு அவர்கள் குறிப்பிட்டது போல், 600 ரூபாய் வரை செலவு செய்து தான் இதைப் பெற வேண்டியிருக்கிறது. பின்னால் இவர்களது மனு நீக்கி வைக்கப்படுகிறது. ஆகவே விரைவில் தகவல் அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா? உண்மையிலேயே இந்தத்திட்டம் பலன் அளிக்கிறதா? இதுவரை எத்தனை நபர்கள் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுக் கடன் கொடுப்பது, வீட்டு வசதி கூட்டுறவு சங்கம் அபெக்ஸ் பாடிக்கு கொடுக்கப்பட்டு, அவர்கள் பிரைமரி சங்கத்திற்கு கொடுத்து, அதன் மூலமாக பரவலாகக் கொடுக்கப்படுவதுதான் முறை என்பதை நீங்கள் அறிவீர்கள். மாண்புமிகு உறுப்பினர் கேட்கும் புள்ளி விவரங்களையெல்லாம் கொடுப்பதானால், நிரம்ப இருக்கின்றது. அவைகளையெல்லாம் படிப்பதானால் 10,15 நிமிடங்கள் ஆகும். அதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். என்னென்ன சிரமங்கள் இருக்கின்றன என்று சொல்வீர்களானால், அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும். எல்லாத் தகவல்களும் என்னிடத்திலே இருக்கின்றன. 7 கோடி ரூபாய் எப்படி 'டிஸ்பர்ஸ்' செய்யப் பட்டது? 4, 2, 1 என்பது யார் யாருக்கு எப்படி எப்படி கொடுக்கப் பட்டது, எவ்வளவு வசூலிக்கப் பட்டிருக்கிறது போன்ற தகவல்கள் எல்லாம் என்னிடத்திலே நிரம்ப இருக்கின்றன. உங்களுக்குச் சிரமங்கள் ஏதாவது இருந்தால் ஒன்று இரண்டு தான் இருக்கும். அவைகளை எழுதி அனுப்புங்கள். இன்று நண்பகலேகூட நீங்கள் அவைகளை எழுதியனுப்பலாம். அவைகளைப் பரிசீலித்து, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

பெரியசோலையில் குடிநீர் வழங்கல்

* வினா எண். 49—திரு. கே. உச்சி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதி பெரியசோலையில் ரூ. 10,000 செலவில் குடிநீர் வசதி செய்து கொடுத்தும் அது உபயோகிக்க முடியாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இது பழுது பார்க்கப்பட்டு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதாகிலும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) ஆம்.

(ஆ) இது பரிசீலனையில் உள்ளது.